தி இந்து குழுமம்
இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
புதன்கிழமை, ஜனவரி 5, 2022

## தமிழிசையை வளர்த்தால்

# கர்னாடக இசையை ஜனரஞ்சகப்படுத்தலாம்

● பாரதிய வித்யா பவனில் ஜன.10-ல் தொடங்குகிறது தமிழிசை விழா

**சென்னை**

மயிலாப்பூர் பாரதிய வித்யா பவனில் தமிழிசை விழா இம்மாதம் 10-ம் தேதி தொடங்கி 17-ம் தேதி வரை நடைபெறவிருக்கிறது. இது குறித்து பாரதிய வித்யா பவனின் இயக்குநர் கே.என்.ராமசுவாமி கூறியதாவது:

தமிழிசையை வளர்ப்பதன் மூலமாகவே கர்னாடக இசையை ஜனரஞ்சகப்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன். கற்பகாம்பாள் கோயிலில் தேவாரம் பாடப்படுகிறது. இதுதவிர, மயிலாப்பூரில் இருக்கும் சபாக்களில் தமிழ்ப் பாடல்கள் பெரும்பாலும் ஒலிப்பதில்லை. அப்படியே ஒலித்தாலும் அந்த நிகழ்ச்சிகள் காலையில் நடப்பவையாக இருக்கும். பணி முடித்து வருபவர்களுக்கு கச்சேரி கேட்பதற்கு உகந்த நேரம் மாலை வேளைதான்.

இந்த அடிப்படையில், மயிலாப்பூரை விட்டு தமிழ் போய்விடக் கூடாது என்பதற்காகவே பாரதிய வித்யா பவனில் முழுக்க முழுக்க தமிழ்ப் பாடல்கள், கீர்த்தனைகள், விருத்தங்களுடன் சொற்பொழிவுகள், இசைக் கச்சேரிகள் 8 நாட்களுக்கு நடக்கவிருக்கின்றன.



▲ கே.என்.ராமசுவாமி

மற்ற சபாக்களிலும் மார்கழி இசை விழாவின் இரண்டு, மூன்று நாட்களை தமிழிசைக்கு ஒதுக்குவதன் மூலம் கர்னாடக இசையை வெகுஜன மக்களிடையே இன்னமும் நெருக்கமாக கொண்டு செல்ல முடியும். இதை யோசனையாகவே தெரிவிக்க விரும்புகிறேன்.

வடசென்னை பகுதியில் ஜார்ஜ்டவுனைச் சுற்றியிருக்கும் சபாக்களில் நடக்கும் தமிழிசையைக் கேட்பதற்கு முன்பெல்லாம் மயிலாப்பூரைச் சுற்றி இருக்கும் பகுதியில் இருப்பவர்கள் செல்வது வழக்கம். இப்போது பேரிடர் காலத்தில் செல்வது கடினம். அப்படிப்பட்டவர்களுக்கும், கர்னாடக இசை என்றால் அது ஒரு சாராருக்கானது என்று நினைப்பவர்களுக்கும், தமிழ்ப் பாடல்களை கர்னாடக இசையில் அளிக்கும் நிகழ்ச்சிதான் இந்தத் தமிழிசை.

கர்னாடக இசைக் கச்சேரிகளில் ரசிகர்களின் மனதை இசை தொடும். ஆனால் பாடல்களின் அர்த்தம் அந்த மொழியைத் தெரிந்தவர்களுக்குத்தான் புரியும். இசை, மொழியைக் கடந்ததாக இருக்கலாம். ஆனால் தெரிந்த மொழியில் எழுதப்பட்டிருக்கும் பாடலை ஒரு ரசிகனால் கூடுதலாக ரசிக்க முடியும்.

மூவர் தேவாரம், ஆண்டாள், கோபாலகிருஷ்ண பாரதி, பாபநாசம் சிவன், பாரதியார், தமிழிசை மூவர்களான முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை, அருணாச்சலக் கவி போன்ற எண்ணற்ற மேதைகள் தமிழில் எழுதியிருக்கும் பாடல்களைக் கொண்டு இன்னிசை நிகழ்ச்சிகள், சொற்பொழிவு, நடன நிகழ்ச்சிகள் நடக்க உள்ளன.

டாக்டர் சுதா சேஷய்யன், உன்னிகிருஷ்ணன், சீர்காழி டாக்டர் சிவசிதம்பரம், உடையாளூர் கல்யாணராமன், அசோக் ரமணி, அபிஷேக் ரகுராம் உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.